# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

தமிழ் மாத இதழ்


| | | | |
|---|---|---|---|
| மலர் : 6 | இதழ்: 10 | ஜூலை : 2022 | ரூ.20/- |
| Volume: 6 | Issue: 10 | July : 2022 | Rs.20/- |




## SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14

## வேதபாரதி
## ஸ்ரீ மஹா மேரு மண்டலி
இணைந்து நடத்திய



# பௌர்ணமி பாராயணம்
# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

வைகாசி மாத பௌர்ணமி விழா வேளச்சேரி அன்னை இந்திரா நகர், அருள்மிகு ஞானசித்தி விநாயகர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள தையல் நாயகி சமேத வைத்தியநாத சுவாமி சன்னதியில் மாலை 6.00 மணி முதல் 7.30 மணி வரையில் வேதபாரதி மற்றும் ஸ்ரீ மஹாமேரு மண்டலி குழுவினரால் பௌர்ணமி ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. 50க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டார்கள். அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஸ்ரீ ஞான சித்தி விநாயகர் ஆலய பெண்கள் குழு பொறுப்பாளர் ஸ்ரீமதி கங்கா பாய் குழுவினர் கவனித்துக் கொண்டார்கள். பிரசாத விநியோகத்துடன் விழா நிறைவுபெற்றது.

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 34

**ப்$^{3}$ரஹ்மமேது மாம் | மது$^{4}$மேது$^{1}$ மாம் |**
**ப்$^{3}$ரஹ்மமேவ மது$^{4}$மேது$^{1}$ மாம் ||**
**(மஹாநாராயண உபநிஷத், த்ரிஸுபர்ண மந்த்ரம்)**
**(38-1)**

**பொருள் :** *பரம்பொருள் என்னை வந்து சேரட்டும். பேரின்பம் என்னை வந்து அடையட்டும். பேரின்பமேயாகிய பரம்பொருள் என்னிடம் குடி கொள்ளட்டும்.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 6 இதழ்: 10

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 9025864231

# புத்தகத்தின் உள்ளே

| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 6 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஆடி மாத விசேஷங்கள் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| ஔவையார் | 15 |
| ஸ்ரீமத் பாகவதம் | 16 |
| ஸ்ரீ ஆதிசங்கரர் | 20 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 24 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் வேதவாக்கு | 25 |
| தர்மத்தின் குரல் | 26 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 31 |
| குழந்தைகள் பகுதி | 34 |
| சிவ பிருந்தாதேவி | 35 |
| லண்டன் பயணம் | 39 |
| பசு சர்வரோக நிவாரணி | 42 |
| தென் கயிலாயங்கள் | 46 |

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# வேதபாரதி செய்திகள்

**சந்தாதாரர்களுக்கு ஓர் வேண்டுகோளும், அறிவிப்பும்**

*ஒரு ஆண்டு சந்தா ரூ.200/-*

*10 ஆண்டு சந்தா ரூ,1500/-*

*2021 ஜுலை மாதம் ஓர் ஆண்டு சந்தா செலுத்தியவர்களின் சந்தா காலம் 2022 ஜுன் மாதத்துடன் முடிவடைந்துவிட்டது. இந்த ஒரு மாதம் (ஜுலை 2022) அவர்களுக்கு புத்தகம் இலவசமாக அனுப்பபப்பட்டுள்ளது. 31.07.2022 க்குள் அவர்கள் சந்தா தொகையை செலுத்தி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். புதுப்பிக்கவில்லையெனில் 2022 ஆகஸ்ட் மாதம் முதல் அவர்களுக்கு "வேதபாரதி செய்திகள்'' புத்தகம் அனுப்பி வைக்கப்பட மாட்டாது.*

*சந்தாவை புதுப்பித்துக் கொள்பவர்களும், புதியதாக சந்தா செலுத்த விரும்புகிறவர்களும், சந்தா தொகையை காசோலை அல்லது* DD *மூலம் செலுத்தலாம். காசோலை அல்லது* DD *யை* **VEDABHARATHI** *என்ற பெயரில் எடுத்து கீழ்க்கண்ட நிர்வாக முகவரிக்கு தங்களுடைய முழுவிலாசத்துடனும் கைபேசி எண்ணுடனும் அனுப்ப வேண்டும்.*

**"வேதபாரதி"**

*எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு,*
*பேபி நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.*

*சந்தா தொகையையோ, நன்கொடையையோ வங்கி மூலம் வழங்கிட விவரங்கள்.*

**VEDABHARATHI**
**CITY UNION BANK,VELACHERY BRANCH**
**A/C NO. 510909010005286 | IFSC : CIUB 0000262**

Ph 94434 95950 | Email: vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# ஒரு நிமிடம் உங்களோடு...

## 48. நல்லதையே செய்வோம்

*நாம் முன் ஜென்மத்தில் என்னவாக இருந்தோம் என்பது நமக்குத் தெரியாது. அடுத்த ஜென்மத்தில் என்னவாக இருக்கப்போகிறோம் என்பதும் தெரியாது. நமக்கு தெரிந்தது நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் இந்த ஜென்மம் மட்டும்தான். ஒரு வேளை ஒருவனுக்கு அவனுடைய முன் ஜென்மம் ஞாபகத்திற்கு வந்து, அவன் ஒரு பணக்காரனிடம் சென்று போன ஜென்மத்தில் நான்தான் உனக்கு அப்பா என்று சொன்னால் என்ன நடக்கும்? அவர் அவனை போலீசில் ஒப்படைப்பார். அல்லது மனநல மருத்துவமனையில் சேர்த்துவிடுவார். இதுபோல் நடந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் கடவுள் நமக்கு முன் ஜென்ம நினைவுகளை வைப்பதில்லை.*

*சுகங்களும் துக்கங்களும் அவரவர் செய்கைகளுக்கேற்ற படி ஏற்படுவதுதான். ஒருவர் வாழ்க்கையில் சந்தோஷமாக இருக்கும்போது அவரைப் பார்த்து 'நீ என்ன புண்ணியம் செய்தாயோ உன் வாழ்க்கை இவ்வளவு சுகமாக இருக்கிறது' என்று சொல்வார்கள். அதேபோல் ஒருவர் துன்பப்படும்போது "நீ என்ன பாவம் செய்தாயோ இப்படி கஷ்டப்படுகிறாய்" என்பார்கள்.*

*எந்த செயலும் தற்செயலாக நடப்பதில்லை. நாம் செய்த செயலால் மட்டுமே எல்லாம் நடக்கிறது. விதைத்த விதையைத்தான் அறுவடை செய்கிறோம். நாம் சேர்த்துவைத்துள்ள கர்மாவின் பலனை நிச்சயம் அனுபவித்தே ஆகவேண்டும்.*

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல். (குறள் 505)**

பொருள் : குணங்களாகிய பெருமைக்கும், குற்றங்களாகிய சிறுமைக்கும் தெளிந்தறியும் உரை கல்லாக உள்ளவை அவரவருடைய செயல்களே.

இந்த ஜென்மாவில் அனுபவிக்கும் சுகங்களும், துக்கங்களும் இந்த ஜென்மாவிலேயே தீர்ந்துவிடுகிறது. இந்த ஜென்மாவில் அறவழியில் நடந்து புண்ணியத்தைத் தேடிக்கொண்டால், அடுத்த ஜென்மாவில் நலம் பெற்று வளமுடன் வாழ்வோம். இந்த ஜென்மாவில் பாபச் செயல்களைச் செய்தால் அடுத்த ஜென்மாவில் பாவத்துக்குரிய தண்டனையை நிச்சயம் அனுபவித்தே ஆகவேண்டும்.

அதனால் இந்த ஜென்மாவிலேயே நம்மால் முடிந்த அளவு நல்ல காரியங்களைச் செய்துவிட வேண்டும்.

**D. சூரியநாராயணன்**

## பாராட்டுக்கள்

தொட்டில் குழந்தை திட்டம் மூலமாக தன் வாழ்நாளை உலகத்திற்கு அர்பணித்த நம் **வேதபாரதியின் பெருமைமிகு டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன் அவர்களுக்கு தாயுமானவள்** என்ற விருதினை **ஸ்ரீ சங்கரா டி.வி. வழங்கி கௌரவித்தது**. வேதபாரதியின் மனமார்ந்த பாராட்டுக்கள்.

வேதபாரதியின் தென் தமிழக பொறுப்பாளர் **ஸ்ரீ யோகாச்சாரியார் ஸ்ரீ சந்திரசேகர் அவர்களுக்கு தங்கத்தாமரை யோகா அவார்டு** தமிழக பாஜக அமைப்பின் மூலம் வழங்கப்பட்டது. வேதபாரதியின் மனமார்ந்த பாராட்டுக்கள்.

# அட்டைப்பட விளக்கம்

# மஹா சுதர்சன ஜயந்தி

*(ஸ்ரீ சக்கரத்தாழ்வார் ஜயந்தி)*

*ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பஞ்சாயுதங்கள் (1) ஸுதர்சனம் என்னும்* **சக்கரம்** *(2) பாஞ்சஜன்யம் என்னும்* **சங்கு** *(3) கௌமோதகீ என்னும்* **கதை** *(4) நந்தகம் எனப்படும்* **வாள்** *(5) சாரங்கம் எனப்படும்* **வில்.** *இவற்றில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பிரதான ஆயுதம் அவர் தம் வலது கரத்தில் ஏந்தியுள்ள சக்கரம் என்று போற்றப்படும்* **ஸ்ரீ சுதர்ஸனமே.** *இது பக்தர்களை காக்கவும் துஷ்டர்களை அழிக்கவும் செய்கிறது. ஸ்ரீ மஹாஸுதர்சன ஜயந்தி எப்படி ஏற்பட்டது?*

*திருமாலின் பக்தனாகிய மன்னர் அம்பரீஷி தன் மன்னர் பதவியை துறந்து காட்டில் கடுமையாக தவம் இருந்து விரதங்களைக் கடைப்பிடித்து மகரிஷியானார். ஒரு நாள் திருமாலுக்கு உகந்த* **"துவாதசி விரதம்"** *மேற்கொண்டிருந்த சமயம் அங்கு* **துர்வாச முனிவர்** *தம் சீடர்களுடன் வந்தார். முனிவரை வரவேற்று அவருக்கும் சீடர்களுக்கும் அனைத்து உபசரிப்புக்களையும் அம்பரீசன் செய்தான். துர்வாசர் தான் கங்கையில் குளித்துவிட்டு வரும் வரையில் காத்திருக்கச் சொல்லிவிட்டுச் செல்கிறார். துவாதசி துவங்கும் நேரம் நெருங்கியும் முனிவரைக் காணாத குழப்பத்தில் ஆழ்ந்த அம்பரீஷி தனது குரு வசிஷ்டரின் அறிவுரைப்படி துளசி தீர்த்தம் அருந்தி உண்ணா நோன்பை முடித்துக்கொண்டு முனிவருடன் உணவருந்த காத்திருந்தான். அப்போது அங்கு வந்த*

துர்வாசர் விவரம் அறிந்து தன்னை சற்றும் மதிக்காத நிலையைக் கண்டு கோபம் கொண்டு அம்பரீஷிக்கு சாபம் கொடுக்க, அம்பரீஷி மஹாவிஷ்ணுவை துதித்தான். துர்வாச முனிவரின் கோபத்திலிருந்து அம்பரீஷியைக் காப்பாற்ற எம்பெருமான் ஸ்ரீ ஸுதர்சன ஆழ்வாராக அவதரித்தார். அன்றைய தினமே ஸ்ரீ மஹாஸுதர்சன ஜெயந்தியாக கொண்டாடப்படுகிறது. ஸ்ரீசக்கரத்தாழ்வார் அறுங்கோண சக்கரத்தின் நடுவில் மூன்று கண்களுடன் தலையில் அக்னி கிரீடம் தாங்கி பதினாறு கரங்களில் ஆயுதங்கள் ஏந்தி காட்சியளிப்பார். ஸ்ரீ மஹா விஷ்ணுவின் வலது கையில் உள்ள சுதர்சன சக்கரம் தீயவர்களை அழிக்கும்போது மறச் சங்கரமாகவும் (வீரம் கொண்டதாகவும்) நல்லவர்களைக் காக்கும்போது அறச்சக்கரமாகவும் (தர்மச்சக்கரமாகவும்) இருக்கும்.

ஸ்ரீ மஹாவிஷ்ணு தனது அனேக அவதாரங்களில் துஷ்ட நிக்ரஹத்தை ஸ்ரீ ஸுதர்னம் மூலமே நிகழ்த்தி அருளினார். நரசிம்ம அவதாரத்தில் ஹிரண்ய கசிபு முதலிய அசுரர்களை கிழித்தெறிய, ஸ்ரீ நரஸிம்மரின் கை நகங்களில் இருந்தார் ஸ்ரீ ஸுதர்சனாழ்வார். சிசுபாலனை ஸ்ரீ சக்கரத்தாழ்வரைக் கொண்டுதான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அழித்தார். கஜேந்திர மோட்சத்தில் ஸ்ரீ சக்ரத்தாழ்வாரைக் கொண்டே முதலையின் கழுத்தை அறுத்து கஜேந்திரனைக் காப்பாற்றினார். மஹாபாரத போரில் ஜெயத்ரதனை அழிக்க சூரியனை மறைக்க வேண்டி வந்தபோது ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா ஸ்ரீ ஸுதர்சனரையே பயன்படுத்தினார்.

தென் இந்தியாவில் 20 இடங்களில் ஸ்ரீ சக்கரத்தாழ்வார் சேவை சாதிக்கிறார். எல்லா விஷ்ணு ஆலயங்களிலும் பெருமாள் வீதி ஊர்வலம் வரும்போது முதலில் ஸ்ரீ ஸுதர்சன சக்கரம் எழுந்தருளிய பின்பே பெருமாள் புறப்பாடு நடபெறும்.

இந்த வருடம் **மஹா சுதர்சன ஜயந்தி** 07.07.2022 வியாழக்கிழமை நிகழ உள்ளது. அன்றைய தினம் மனம், வாக்கு, காயம் (உடல்) என திரிகரண சுத்தியுடன் ஸ்ரீ சக்கரத்தாழ்வாரை பிரார்த்தித்து நெய் விளக்கேற்றி ஸ்ரீ ஸுதர்சன மந்திரத்தை ஜபித்து நமஸ்கரித்தால் எதிரிகளின் தொல்லையிலிருந்து விடுபடலாம். நினைத்தது நிறைவேறும்.

**D. சூரியநாராயணன்**


# ஸ்ரீ கோகுல கிருஷ்ண கோசாலை

**கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபல் ட்ரஸ்ட்**

**(80 G Available)**

**660 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**

1. கோ பூஜை செய்ய
2. கோ தானம் செய்ய
3. பசு பராமரிப்பு செய்ய
4. பிதுர்கள் திருப்தி அடைய – (மாலய பட்ச காலத்தில்)



**பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்**

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**

ஊத்துக்கோட்டை, திருவள்ளுவர் - 602 023

**8940224744 / 9363111799**

## சுபக்ருது வருஷம் - ஆடி மாத விசேஷங்கள்

**(ஜுலை 17.07.2022 முதல் ஆகஸ்ட் 16.08.2022 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *17.07.2022* | *ஆடி 1* | *ஞாயிறு* | *ஆடிப்பண்டிகை* |
| *19.07.2022* | *ஆடி 3* | *செவ்வாய்* | *சஷ்டி* |
| *23.07.2022* | *ஆடி 7* | *சனி* | *ஆடி கிருத்திகை* |
| *24.07.2022* | *ஆடி 8* | *ஞாயிறு* | *ஏகாதசி* |
| *26.07.2022* | *ஆடி 10* | *செவ்வாய்* | *திருவாதிரை, மாத சிவராத்ரி* |
| *28.07.2022* | *ஆடி 12* | *வியாழன்* | *அமாவாஸை* |
| *01.08.2022* | *ஆடி 16* | *திங்கள்* | *சதுர்த்தி, ஆடிப்பூரம்* |
| *03.08.2022* | *ஆடி 18* | *புதன்* | *ஆடிப்பெருக்கு, சஷ்டி* |
| *05.08.2022* | *ஆடி 20* | *வெள்ளி* | *வரலக்ஷ்மி விரதம்* |
| *07.08.2022* | *ஆடி 22* | *ஞாயிறு* | *அனுஷம்* |
| *08.08.2022* | *ஆடி 23* | *திங்கள்* | *ஏகாதசீ* |
| *11.08.2022* | *ஆடி 26* | *வியாழன்* | *ரிக் யஜு உபாகர்மா,* |
| *12.08.2022* | *ஆடி 27* | *வெள்ளி* | *ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஜயந்தி காயத்ரீ ஜபம்* |
| *15.08.2022* | *ஆடி 30* | *திங்கள்* | *மஹா சங்கடஹர சதுர்த்தி* |

### 28.07.2022 வியாழக்கிழமை - அமாவாஸை

*ஸ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே க்ரீஷ்மரிதௌ கடக மாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர:குரு வாஸர யுக்தாயாம் புனர்வஸு (உபரி) புஷ்ய நக்ஷத்ர யுக்தாயாம் விஷ்ணுயோக அமாவாஸ்யா புண்யகாலே தர்ஸ் ஸ்ராத்தம் தில தர்ப்பண ருபேண அத்ய கரிஷ்யே.*

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 39

## அத்தியாயம் – 2
## "ஸாங்கிய யோகம்"

*சென்றமாதம் அத்தியாயம் 2 ஸ்லோகம் 47க்கு அளித்த விளக்கத்தின் தொடர்ச்சி......*

*47வது ஸ்லோகத்திலிருந்து நாம் நான்கு விஷயங்களை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.*

1. *எதைச் செய்தாலும் அதை முழு ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும்.*
2. *அதில் எது வந்தாலும் அதை திடமான மனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். மனதில் ஒரு* Determination *இருக்க வேண்டும்.*
3. *நம்முடைய வாழ்க்கையில் நமக்கு ஒரு* Clear Direction *இருக்க வேண்டும். பழையதை நினைத்தால் இப்போது செய்யப்போவதில் ஒரு தடங்கல் வரும். நான் முன்பு ஒரு காரியத்தைச் செய்தேன். அதன் விளைவு இப்படி ஆகிவிட்டது என்று நினைக்கத் தோன்றும். அதனால் கடந்த காலத்தை நினைக்கக்கூடாது. வருங்காலத்தை நினைத்தால் எதிர்பார்ப்புகள் நம் மனதை பாதிக்கும். அதனால் நம் மனது எப்போதும் நிகழ்காலத்தையே சிந்திக்க வேண்டும். நிகழ்காலம் ஒன்றுதான் நம் கையில் உள்ளது.*
4. *நம் வாழ்க்கையில் நம்மால் முடிந்த அளவிற்கு மற்றவர்களுக்கு உதவ வேண்டும். அப்படி செய்தால்*

*யாராவது நமக்கு உதவ வருவார்கள். சும்மா இருக்கக்கூடாது.*

*நமக்கு கர்மங்களை ஆற்றுவதில்தான் பொறுப்பு உண்டு. அந்த கர்மங்களை நாம்தான் செய்கிறோம் என்ற ஒட்டுதல் இருக்கக்கூடாது. அந்த கர்மங்களின் பலன்களில் நமக்கு உரிமை இல்லை. கர்மங்களை ஆற்றாமலும் இருக்கக்கூடாது. இதைத்தான் வள்ளுவரும் கூறுகிறார்.*

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு. (குறள் 350)**

**பொருள் :** *பற்றற்றவனாகிய கடவுளின் பற்றினை மட்டும் பற்றிக் கொள்ளுதல் வேண்டும். எல்லாப் பற்றுக்களையும் ஒழிப்பதற்கு அப்பற்றைக் கொள்ள வேண்டும்.*

1. *மழை பொழிகிறது ஆனால் அது நம்மிடமிருந்து கைம்மாறு எதையும் எதிர்பார்ப்பதில்லை.*
2. *சிபிச் சக்கரவர்த்தி புறாவிற்கு தன் சதையைக் கொடுத்தான். அரிச்சந்திரன் உண்மை மட்டுமே பேசினான். பாரி வாடிய முல்லைக்கு தன் தேரைக் கொடுத்தான். ஆனால் இவர்கள் யாரும் புகழை எதிர்பார்க்கவில்லை. தங்கள் கடமைகளைச் செய்தார்கள்.*

*“பலனைக் கருதாமல் கடமைக்காகப் போர் புரி” என்று பகவான் அர்ஜுனனுக்கு அறிவுறுத்துகிறார்.*

*வீட்டிலும், நாட்டிலும் பலனை எதிர்பார்க்காமல் நம் கடமைகளைச் செய்ய வேண்டும்.*

*நான் எப்படி செயல் புரியவேண்டும் என்றஅர்ஜுனனின் கேள்விக்கு பகவான் அடுத்த ஸ்லோகத்தில் பதில் அளிக்கிறார்.*

**யோக$^{3}$ஸ்த$^{2}$:குரு கர்மாணி ஸங்க$^{3}$ம் த்யக்த்வா த$^{4}$னஞ்ஜய/ ஸித்$^{3}$த்$^{4}$யஸித்$^{3}$த்$^{3}$யோ: ஸமோ பூ$^{4}$த்வா ஸமத்வம் யோக$^{3}$ உச்யதே// (கீ 2-48)**

**பொருள் :** *தனஞ்ஜயா (பகவான் அர்ஜுனனை "தனஞ்ஜயா'' என்று அழைக்கிறார்) யோகத்தில் நிலைபெற்று, பற்றினைத் துறந்து வெற்றி தோல்விகளை சமமாகக் கொண்டு கருமம் செய். நடுவு நிலையே யோகம் என்று சொல்லப்படுகிறது.*

*இந்த ஸ்லோகம் மிகவும் உயர்ந்த கருத்துள்ள ஒரு ஸ்லோகம்* **"யோக''** *என்பதற்கு பகவான் அழகான விளக்கம் அளிக்கிறார். மனதை தராசு முள் போன்று நடுநிலையில் வைத்திருப்பதற்கு* **"யோகம்''** *என்று பெயர். மனது அப்படி நடுநிலையில் இருக்கும்போது உறுதி பெறுகிறது.* **"கர்மயோகி''** *தன்னை ஈஸ்வரனின் வேலைக்காரனாக பாவித்துக் கொண்டு செயல்படுகிறான். ஈஸ்வரனின் தூண்டுதலின் படி தனது கடமையை செய்கிறானே தவிர அந்த செயலினால் வரும் பலன்களை அவன் யோசிப்பதில்லை. வெற்றி, தோல்விகளை அவன் சமமாகவே கருதுகிறான்.*

*நம்முடைய வாழ்க்கையிலும் நாம் செய்யும் எல்லா செயலிலும் வெற்றியும் வரும், தோல்வியும் வரும். வரும் பலனைப்பற்றி கருதாமல் நம்முடைய கடமைகளைச் சரிவர செய்தோமானால் அதுவே சிறந்த* **"யோகம்''** *ஆகிறது.*

*கீதை தொடரும்...*

**வாசகர் கடிதம்**

*குழந்தைகள் பகுதி மிகவும் அருமை. சாதனைப்பறவைகள் படிக்க மிகவும் நன்றாக இருந்தது.*

**ஸ்ரீ சிவசங்கரன், நங்கநல்லூர்.**

## ஔவையார்

ஒவ்வொரு மாதமும் "ஔவையார்" அருளிய **நல்வழி** நூலிலிருந்து மாதம் ஒன்று அல்லது இரண்டு பாடல்கள் இந்தப் பகுதியில் வெளியாகும்.

### பாடல் 27

**ஒன்றைநினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும்**
**அன்றி அது வரினும் வந்தெய்தும்-ஒன்றே**
**நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்**
**எனையாளும் ஈசன் செயல்**

**பொருள் :** ஒன்றைப் பெறவேண்டும் என்று நினைத்துச் செயல்படும்போது, அது வந்து சேராமல் மற்றொன்று நம்மிடம் வந்து சேர்வதும் உண்டு. அதுவன்றி நினைத்த செயலே கைகூடி வருதலும் உண்டு. ஒன்று கைகூடி வரவேண்டும் என்று நினையாதபோதே தானே அதுவாகவே முன்வந்து நிற்றலும் உண்டு. அனைத்தும் என்னை ஆளும் ஈசன் செயல். என்னால் ஒன்றும் இல்லை.

**விளக்கம் :** நாம் ஒரு பொருளை வேண்டும் என்று நினைத்தால், விதி இருந்தால் அது கிடைக்கும் அல்லது அது கிடைக்காமல் போகலாம். அல்லது வேறு கிடைக்கலாம். நினைக்காத ஒன்று கிடைத்தாலும் கிடைக்கலாம். மனிதர்களின் விருப்பத்தில் ஒன்றும் நடக்காது. கடவுளின் விதிப்படிதான் அனைத்தும் நடக்கும். எல்லாம் ஈசன் செயல்.

தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்
**ப்ரம்மஶ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி

பகுதி - 19

பகவானின் அவதாரங்கள் தொடர்ச்சி

**7. பகவானின் ஏழாவது அவதாரம் "யக்ஞ" அவதாரம்.**

பிரம்மாவின் மூத்த மகனான ஸ்வாயம்பு மனுவிற்கு "ப்ரியப்ரத', "உத்தானபாதன்" என்ற இரு மகன்கள். ஆஹுதி, தேவஹுதி, ப்ரஸுதி ஆகிய மூன்று மகள்கள் இவர்களில் ஆஹுதியை "ருசி" பிரஜாபதிக்கும், தேவஹுதியை கர்த்தம பிரஜாபதிக்கும், ப்ரஸூதியை தக்ஷபிரதாபதிக்கும் திருமணம் செய்துவைத்துவிட்டு, அரசாட்சியைத் துறந்து தன் மனைவியான ஷதரூபாதேவியுடன் தவம் மேற்கொள்ள காட்டிற்கு போனார். தவத்தில் தன்னைப் போன்ற சாதகர்களுக்கு மோட்ஷம் கிடைக்க வேண்டும் என்று வேண்டி, ஈசாவாஸ்ய உபநிஷத்தை பாராயணம் செய்து ஸ்ரீஹரியை வேண்டி வணங்கினார். அப்போது ருத்ரதேவரிடம் சாகாவரம் பெற்ற அரக்கர்கள் அரசனைக் கொல்ல வந்தார்கள். அப்போது பகவான் ருசிக்கும் ஆஹுதிக்கும் "யக்ஞர்" என்ற திருநாமத்தோடு பிறந்து அந்த அரக்கர்களை அழித்தார். தேசத்தை நன்றாக ஆளும் விதத்தை ருசி முனிவருக்கு விளக்க எடுத்த அவதாரமே **"யக்ஞ"** அவதாரம். (பா 1-3-12)

**8. பகவான் எடுத்த எட்டாவது அவதாரம் "ரிஷபதேவ அவதாரம்'**

ப்ரியவ்ரத ராஜனின் பேரனான நாபிராஜன் புத்ரகாமேஷ்டி யாகத்தைச் செய்தான். அவனுக்கும் அவன் மனைவி மேருதேவிக்கும் பகவான் ஸ்ரீஹரியே மகனாக ரிஷப ரூபத்தில் அவதரித்தார். ரிஷப அவதாரம்

மிகவும் அற்புதமான அவதாரம். நம் நாட்டிற்கு "பாரதம்" என்று பெயர் வந்ததே இந்த ரிஷபனின் மகனான "பரதன்" மூலம்தான். எப்படி உலகியல் பற்று இல்லாமல் வாழவேண்டும் என்பதை இந்த உலகத்தோருக்கு உபதேசித்தவர் (பா=1-3-13)

**9. பகவானின் ஒன்பதாவது அவதாரம் "ப்ருது" ராஜன் அவதாரம்**

துருவனுடைய வம்சத்தில் பிறந்தவன் **"வேனன்"** என்னும் அரசன்  இவன் மிகவும் கொடுங்கோலனாக இருந்தான். அப்படி அவன் கொடுங்கோல் ஆட்சி புரிந்த போது பூமாதேவி தன்னிடம் இருந்த சொத்துக்கள் அத்தனையையும் மறைத்துவிட்டாளாம். வேனனின் கொடுமை தாங்கமுடியாமல் போனதால் ரிஷிகள் ஒன்று கூடி சாபத்தால் அவனுடைய உயிரை பறித்தனர். ஆனால் அடுத்து மன்னன் வேண்டுமே. அதனால் இறந்த வேனனின் உடலை கடைந்தனர். அதிலிருந்து தோன்றியவன்தான் **"ப்ருது"**. ப்ருது சக்ரவர்த்தி நல்லாட்சி புரிந்ததால் பூமாதேவி அத்தனை செல்வங்களையும் அவனுக்கு திரும்ப கொடுத்தாள். ஒரு அரசன் மக்களை எப்படி சந்தோஷமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை இந்த அவதாரத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். "ப்ருது" சரித்திரம் ஸ்ரீமத் பாகவதத்தில் பின்னால் விவரமாக கூறப்பட்டுள்ளது. (பா 1-3-14)

**10. பகவான் எடுத்த பத்தாவது அவதாரம் "மத்ஸ்ய" (மீன்) அவதாரம் :**

நாம் பொதுவாக சொல்லும் "தசவதாரத்தில்" முதலில் வரும் அவதாரம் **"மத்ஸ்ய"** அவதாரம். ஆனால் ஸ்ரீமத் பாகவதத்தில் இது பத்தாவது அவதாரம்.

பிரம்மாவின் வேண்டுகோளை ஏற்ற ஸ்ரீ

*மஹாவிஷ்ணு மத்ஸ்யமாக (மீனாக) அவதாரம் எடுத்து கடலில் ஒளிந்திருந்த* **“சோமுகாசுரன்”** *என்னும் அரக்கனை போரில் வதம் செய்து வேதங்களை மீட்டு பிரம்மாவிடம் ஒப்படைத்தார்.*

**“சத்தியவிரதன்”** *என்றஅரசனுக்கும் அவனைப் போன்றமற்றபக்தர்களுக்கும் பிரம்ம ஞானத்தை உபதேசிப்பதற்காகவும் இந்த மத்ஸ்யாவதாரம் காரணமாக இருந்தது என ஸ்ரீமத் பாகவத புராணம் இயம்புகிறது. (1-3-15)*

*சென்ற 28.04.2022 அன்று* **“மத்ஸய ஜயந்தி”** *கொண்டாடப்பட்டது.* **“வேதபாரதி செய்திகள்”** *ஏப்ரல் 2022 இதழில் இந்த அவதாரம் விவரமாக அட்டைப்படத்துடன் விளக்கப்பட்டுள்ளது.*

**11. பகவானின் பதினோராவது அவதாரம் “கூர்ம” (ஆமை) அவதாரம் :**

*அசுரர்களும், தேவர்களும் பாற்கடலை கடைந்தபோது பருமன் தாங்காமல் மந்தர மலை கடலில் மூழ்கியது. தேவேந்திரனும், தேவர்களும் பகவான் திருமாலை சரண் அடைந்தனர். பக்தர்களைக் காக்கும் திருவுளம் கொண்ட பகவான் மிகப்பெரிய ஆமையாக (கூர்மமாக) வடிவம் எடுத்து கடலில் மூழ்கி மலையைத் தாங்கிக்கொண்டு மேலே கொண்டுவந்தார். இவ்வாறு தேவர்களும் பூவுலகும் நன்மை பெறசெல்வங்களை அளித்தார். கூர்ம மூர்த்தியான பகவான் திருமால். ஸ்ரீமத் பாகவதத்தில் இந்த அவதாரத்தை விளக்குவது முதல் ஸ்கந்தத்தில் 3ஆவது அத்தியாயத்தில் வரும் 16வது ஸ்லோகம் இந்த ஸ்லோகத்தில்* **“ஆமை ரூபம்”** *என்பதற்கு ஸம்ஸ்கிருதத்தில்* **“கமடரூபணே”** *என்று கூறப்பட்டுள்ளது. இந்த உலகமனைத்திற்கும் பகவானே*

ஆதாரம். அவர்தான் தாங்குகிறார் என்பதை நமக்கு இந்த அவதாரம் தரும் முக்கிய செய்தி. இந்த அவதாரம் மிக மிக உயர்ந்த அவதாரம். அதனால்தான் ஸ்ரீமத் பாகவதத்தில் கடைசி ஸ்கந்தமான 12வது ஸ்கந்தத்தில் கடைசி அத்தியாயமான 13வது அத்தியாயத்தில் முதல் ஸ்லோகம் **"கமடக்ருதேர் பகவத: ஸ்வாஸாநிலா:பாந்து வ:''**= ஆமையுருவமெடுத்த பகவானுடைய அப்படிப்பட்ட மூச்சுக்காற்றுக்கள் உங்களைக்காக்கட்டும்'' என்று முடிகிறது.

இந்த வருடம் **"ஸ்ரீகூர்ம ஜயந்தி" 25.06.2022 சனிக்கிழமை** அன்று நிகழ்ந்தது. **"வேதபாரதி செய்திகள்"** ஜுன் 2022 மாத இதழில் அட்டைப்படத்துடன் இந்த ஸ்ரீகூர்ம அவதாரம் விளக்கப்பட்டுள்ளது.

அவதாரங்கள் தொடரும்..

உ

ஸ்ரீ குருப்யோ நம

**பூஜ்ய ஸ்ரீ பரமானந்தபாரதி ஸ்வாமிகள் ஆராதனை**

**இடம் : ஸ்ரீ சங்கர குருகுலம்**

CP ராமசாமி தெரு, மந்தைவெளி, (ரயில் நிலையம் அருகில்) சென்னை.

**24.07.2022, ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| காலை 7.00 மணி | ஸ்ரீ காயத்ரீ ஜபம் |
| காலை 8.00 மணி | வேதபாரதி குழந்தைகள், பெரியவர்களால் மூன்று வேதங்களும் பாராயணம் |
| காலை 10.30 மணி | ஸ்வாமிகளுக்கு புஷ்பாஞ்சலி — |
| பகல் 11.30 — 1.30 மணி | கோடி காயத்ரீ சிறப்பு கூட்டம் |
| மாலை 4.30 மணி | வேதபாரதியின் வேர்களுக்கு பாராட்டு |
| | இசை விழா |

**25.07.2022, திங்கட்கிழமை துவாதசி**

காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரையில்

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு ஆராதனை வைபவம்

காலை 10.00 மணிக்கு பிரசாதம்.

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன் அத்தியாயம் – 3 அவதார மஹிமை பாகம் 9**

**அத்தியாயம் – 3**

## குழந்தை பருவம்

*குழந்தை சங்கரருக்கு 5 வயதிலேயே உபநயனம் செய்ய வேண்டும் என்று சிவகுரு ஆசைப்படுகிறார். அப்போது குழந்தை சங்கரனுக்கு மூன்று வயது. இது குறித்து குடும்பத்தில் உள்ள பெரியவர்களிடம் கேட்டார். அதில் ஒரு மூத்த பிராமணர் சிவகுருவிடம் "சிவகுரு,* **"கர்பாஷ்டமே ப்ராஹ்மனம் உபநயீத.....** *என்னும் வசனப்படி கர்பத்தில் இருக்கும் காலத்தையும் ஒரு வயதாக கணக்கிட்டால் குழந்தையின் 7ஆவது வயதில் 8 வயதாக கணக்கிட்டு பூணூல் போடலாம் என்றுதானே சாஸ்திரம் கூறுகிறது'' என்றார். அதைக்கேட்ட* **"சிவகுரு"** *"மேதாவியான குழந்தைக்கு ஐந்தாவது வயதிலேயே உபநயனம் செய்யலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது'' என்றார்.*

*(மஹா பெரியவா* **"தெய்வத்தின் குரலில்''** *(இரண்டாம் பகுதி) "ஐந்து வயஸிலேயே உபநயனம் செய்யும் ஒரு வழக்கமும் உண்டு. இது* **"காம்யோபநயனம்"** *எனப்படும்.* **"காம்யம்"** *என்றால் ஒரு இஷ்டத்தை உத்தேசித்தது என்று அர்த்தம். குழந்தை விசேஷ அபிவிருத்தி அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டால் இப்படி செய்யலாம்'' என்று கூறியுள்ளார்)*

*சிவகுரு குழந்தை சங்கரனிடத்திலேயே "சங்கரா நாங்கள் உனக்கு உபநயனம் செய்ய*

ஆசைப்படுகிறோம்” என்கிறார். இதைக் கேட்ட சங்கரன் தன் தந்தையிடம் “தந்தையே “உபநயனம்'' என்றால் “மற்றுமொரு கண்'' என்றும் பொருள் உண்டு அல்லவா? என்று கேட்டு உபநயனம் குறித்து பல விஷயங்களைக் கூறுகிறான். குழந்தை இப்படி கூறியதைக்கேட்ட சிவகுரு திகைத்து நின்றார். சங்கரன் தன் தந்தையிடமிருந்து அனேக சாஸ்திரங்களை கற்றான்.

சங்கரனுக்கு உபநயனம் செய்துவைக்கும் பாக்கியம் சிவகுருவிற்கு கிடைக்கவில்லை. உபநயனம் நடத்துவதற்கு முன்பே சிவகுரு சிவலோக ப்ராப்தி அடைந்துவிட்டார். இது ஆர்யாம்பாளுக்கு பெரிய அதிர்ச்சியை தந்தது. பெரியவர்கள் எல்லோருமாக சேர்ந்து சிவகுருவின் அந்திமஸம்ஸ்காரங்களை நடத்தினார்கள்.

ஒரு வருடம் முடிந்ததும் சிவகுருவின் வருஷாப்தீகமும் முடிந்தது. அப்போது சங்கரனுக்கு வயது 5. சிவகுரு ஆசை பட்டதுபோல் பந்துக்கள் எல்லோருமாக சேர்ந்து சங்கரனுக்கு உபநயனம் நடத்தினார்கள்.

பிராமணனுக்கு உபநயனம் என்பது இரண்டாவது ஜன்மம். அந்த இரண்டாவது ஜன்மம் அடைந்ததும் அவன் குருகுலத்தில் தங்கி வேதங்களைக் கற்கவேண்டும். சங்கரனை குருகுலத்தில் சேர்ந்தார்கள்.

பாடசாலையில் சங்கரனுக்கு வேதங்களைச் சொல்லித்தருவதில் குருவிற்கு எந்தவித கஷ்டமும் ஏற்படவில்லை. குரு எதை போதித்தாலும் அதை உடனே புரிந்துக்கொண்டு **“ஏக சந்த க்ராஹி”** யாக திகழ்ந்தார். குரு மிகவும் சந்தோஷப்பட்டார்.

**“ஏக சந்த க்ராஹி’** என்றால் எதையும் ஒரு முறை

*கேட்டாலும், படித்தாலும் அதை பசுமரத்தாணி போல் நினைவில் கொள்ளும் திறமை)*

*அந்த கால பாடசாலைகளின் தர்மப்படி அங்கு படிக்கும் குழந்தைகள் பணக்காரனானாலும், ஏழையானாலும் அக்ரஹாரங்களுக்குப் போய் பிக்ஷை எடுத்துக்கொண்டு வந்து குருவிடம் கொடுக்கவேண்டும். குரு அதை சமைத்து எல்லோருக்கும் கொடுத்தபிறகு மிஞ்சியதை அந்த பிரம்மச்சாரிக்குக் கொடுப்பார். அதைச் சாப்பிட்டு திருப்தி அடைய வேண்டும். இந்த நியமங்களால் பிரம்மசாரிக்கு அஹங்காரமமகாரம் இரண்டும் அறவே ஒழிந்துவிடும். வேத தத்துவத்தை அறிய அஹங்காரமும், மமகாரமும் உதவாது.*

*குழந்தை சங்கரனும் ஏகாதசி விரதம் முடித்து அடுத்த நாளான துவாதசியன்று தன் சகாக்களுடன் பிக்ஷாடனம் கேட்க சென்றார். அப்போது சங்கரனுக்கு வயது 6 ஒரு வீட்டின் வாசலில் நின்று தன்னுடைய பிக்ஷைபாத்திரத்தை கையில் வைத்துக்கொண்டு* **“பவதி பிக்ஷாந்தேஹி”** *என்று கூவினான்.*


*அந்த வீட்டின் பிராமணர் ஒரு* **“கபோத வ்ருத்தி”** *பிராமணர்.* **“கபோதம்”** *என்றால்* **“புறா”**. *புறா பறவை தனக்கு வேண்டிய தானியங்களைச் சேர்த்துவைக்காது. ஒரு இடத்தில் தானியங்கள் இருந்தால் வேண்டியதை சாப்பிட்டுவிட்டு மிச்சத்தை விட்டுவிட்டு போய்விடும். வயலில் அறுவடை முடிந்து பறவைகளும், எலிகளும் தின்ற பிறகு எஞ்சிய நெல்மணிகளைப் பொறுக்கி எடுத்துவந்து ஒரு புறாவைப்போல் வாழ்க்கைநடத்துவது ஒரு தர்மம். அந்த பிராமணரும் தானியங்களை சேகரிக்க வெளியே போயிருந்தார்.*

தொடரும்..


Find your partner
Best of luck
Brahmin Kalyanam.com
BK MATRIMONY.com
An Auspicious Begining...
(Exclusive Portal for Brahmins)
பிராமணர்களுக்கு மட்டும்
REGISTER & GET
Brides/Grooms Profiles +
Free Horoscope Matching +
TWO YEARS Validity
One time Membership Fees ₹ 1000 only.
Astro Guidance By:
Thethiyur V J Raman
Aathmartha Jothidar
89397 02500
brahminkalyanam.com@gmail.com

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## பிறந்த குலாசாரமே உய்நெறி



"உன்னுடைய பூர்விகர்கள் எப்படிப் பண்ணினார்களோ, அப்படியே நீயும் பண்ணு''. அதாவது முன்னே சொன்ன சிகை, ஸூத்ரம், புண்ட்ரம், ஸமயாசாரம் எல்லாவற்றிலும் உன் மூதாதைகள் கடைப்பிடித்த ஆசாரங்களையே நீயும் கைக்கொள்ளு. இப்படிச் செய்யாமல், அதாவது தன் குலமுன்னோர் வழக்கைப் பின்பற்றாமல், வேறு மார்க்கத்தில் போனால் வேறுவித வாழ்க்கை முறைகளையும் வெளி அடையாளங்களையும் மேற்கொண்டால், அதாவது தன் மதத்திலிருந்தும் கிளை ஸம்பிரதாயத்திலிருந்தும் வேறொன்றுக்குப் போனால் அப்படிச் செய்கிறவன் பதிதன் ஆகிவிடுவான் என்று சொல்லியிருக்கிறது. பதனம் என்றால் விழுவது. பதிதன் என்றால் "விழுந்தவன்'' என்று அர்த்தம். அதாவது ஸன்மார்க்கத்தில் நடந்து போகாமல், அதோகதியில் விழுந்து விட்டவன் என்று அர்த்தம். ஈஸ்வரனுக்கு, பரமபுருஷனுக்கு த்ரோஹம் செய்து கீழ்லோகத்துக்கும் இப்போதைவிட ரொம்ப ஹீன ஜன்மாவுக்கும் பூர்விகர்களின் ஆசாரப்படி செய்யாதவன் இப்படிப்பட்ட பதிதன் ஆகிவிடுகிறான். லௌகிகத்திலும் பல தினுஸில் கஷ்டப்பட்டுக்கொண்டு, ஆத்மாவையும் உசத்திக்கொள்ள முடியாத கஷ்ட ஜீவனமாகவே அவனுடைய வாழ்க்கை இருக்கும்.

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை


# பலர் சொல் விளைவிக்கும் மனமாற்றம்



சோமயாஜி என்பவர், தான் செய்யபோகும் சோம யாகத்தில் பலியிடுவதற்காக, சில ஆடுகளை வாங்கினார். அவற்றை தம் வீட்டிற்கு அவர் ஓட்டிக்கொண்டு சென்றதைப் பார்த்த மூன்று பேர்கள், எப்படியாவது அந்த புஷ்டியான ஆடுகளை அவரிடமிருந்து பறித்து, தங்கள் மதிய உணவாக அவற்றை சாப்பிட்டுவிட வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். பிறகு அவர்கள், சோமயாஜி நடந்து செல்லும் சாலையில், வெவ்வேறு இடங்களில் ஒளிந்து கொண்டார்கள்.

சிறிது நேரம் கழித்து வெளியே வந்த ஒருவன், சோமயாஜியை சந்தித்து, 'ஓ சோமயாஜி ! என்ன இது? உங்களைப் பார்த்தால் பெரிய பக்திமானாகத் தெரிகிறது. நெற்றியில் திருநீரும், பளிச்சென்று ஒளிவீசுகிறது. அதே சமயத்தில், இந்த நாய்களை இழுத்துக்கொண்டு செல்கிறீர்களே!'' என்று ஆச்சர்யத்தோடு கேட்டான். சோமயாஜிக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும், அந்த ஆடுகளை ஒருமுறை பார்த்ததும், அவரது குழப்பம் தீர்ந்தது. சோமயாஜி அந்த மனிதனை நோக்கி, தள்ளிப் போ, நான் ஆடுகளைத் தானே வீட்டிற்கு ஓட்டிச் சென்று கொண்டிருக்கிறேன். அவற்றைப் பார்த்து நாய்கள் என்று சொல்கிறாயே!

தொடரும்...



# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

## அத்தியாயம் 3 : வேதங்கள்

*சென்ற மாத தொடர்ச்சி 3-4 :*

*‘இது சரியல்ல! ஒவ்வொரு வேத ஸூக்தத்தின் தொடக்கத்திலும் அதை இயற்றிய ரிஷியின் பெயரும் போற்றப்படுகிற கடவுளின் பெயரும் அதற்குரிய சந்தஸும் காணப்படுகின்றவே!”*

*ஸூக்தத்தை இயற்றியவர் ரிஷியல்ல; ஒரு ரிஷிக்கும் அந்த ஸூக்தத்திற்கும் உள்ள தொடர்பு, இவ்வித்தியாசத்தின் இறுதிப்பகுதியில் (3-9) தெளிவாகும். அடுத்த மூன்று பகுதிகளில் ஸூக்தத்தின் ஒரு ரிஷி என்ற கருத்து மறுக்கப்படும்.*

*3.5. வேதங்களின் இசைக்கட்டு :*

*சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்யாமாஸாஸ்திரி போன்ற மிகப்பிரசித்தி பெற்ற இசைக்கலைஞர்களை எடுத்துக் கொள்வோம். அவர்கள் குறிப்பிட்ட ராகத்திலும் தாளத்திலும் தங்களின் பாடல்களை இயற்றினார்கள். ஆனால், 200 ஆண்டுகளுக்குள்ளேயே ராகம் மாறுதலடைந்துள்ளது. சில இடங்களில் தாளமும் மாற்றமடைந்துள்ளது. தியாகராஜரின் பஞ்சரத்னக் கீர்த்தனைகளில் ஒருவரின் சொந்தக் கற்பனைக்குச் சிறிதும் இடமில்லை; அவற்றிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் வேதங்களில் இத்தகைய எந்த மாற்றமும் ஏற்படவில்லை. வேதங்களைப் பாராயணம் செய்வதில், இசை சார்ந்த ஆறு விஷயங்கள் உள்ளன.*

*தொடரும்..*


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
WOPPER



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**



There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

– ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

**ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!**



அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையில் சிகிச்சை பெற வரும் ஏழை புற்று நோயாளிகளுக்காக நம்ம தர்மசாலாவின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கிறது. தஞ்சம் தேடி வந்த ஏழை புற்றுநோயாளிகள் விருந்தினர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு நமது நம்ம தர்ம சாலாவில் தங்குமிடமும்; மூன்று வேளை உணவும் **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஏழை புற்று நோயாளிகள் முறையான சிகிச்சையை தடையின்றி பெற்று புற்று நோயிலிருந்து விரைவில் குணமடைந்து தங்கள் குடும்பத்துடன் நிம்மதியாக வாழ்கிறார்கள். ஏழை புற்றுநோயாளிகளின் உயிர் காக்கும் இந்த உயரிய சேவை தொடர்ந்திட நீங்களும் உதவிடுங்கள். காலத்தால் அழியாத பெரும் புண்ணியத்தை உங்களுக்கும் உங்கள் சந்ததியினருக்கும் சேர்த்திடுங்கள்...


**எம்பெருமானுக்கு சேவை செய்வதும்;** ஏழைகளின் பசித்த வயிறுக்கு உணவளிப்பதும்; அதிலும் ஏழை புற்றுநோயாளிகளின் பசியாற்றுவதும் ஒன்றுதான் என்கிற தெளிவான தர்ம சிந்தனையுடன் வருகை தந்த பெரியவர் **ரங்கராஜன்** அவர்கள் நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு வழங்க, தான் சார்ந்த **அனுராம் சேவா டிரஸ்ட்** சார்பாக ரூ.50,000/- நன்கொடையை நமது நிர்வாக அறங்காவலர் அவர்களிடம் வழங்கி மகிழ்ந்தார். திரு. ரங்கராஜன் அவர்களும், அனுராம் சேவா டிரஸ்டை சார்ந்தவர்களும் நூறாண்டுகள் நலமுடன் வாழ இறைவனை ப்ரார்த்திக்கிறோம். 🙏



4.5.2022

செங்கல்பட்டுக்கு அடுத்த மாமண்டூர் கிராமத்தில் நாம் நிர்மாணிக்க உள்ள **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்லம்** இயற்கைச் சூழலில் அமைய உள்ளது. இதன் கட்டுமானப் பணிகளுக்கு சுமார் **ஆறு கோடி ரூபாய்** செலவாகும் என்று கணக்கிடப்பட்டு, இதுவரை இரண்டு கோடி ரூபாய் நன்கொடையாக நம்மிடம் வந்துள்ளது. தற்போது முதற்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வேலைகள் முடிந்து 2023 சித்திரையில் நமது இலவச முதியோர் இல்லம் ஏழை முதியவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு

**முதியோர் தங்கும் அறை வரைபடம்**



வரவேண்டும் என்கிற எங்களது நல்ல எண்ணம் நிறைவேற உங்களின் தாராள நிதியுதவியை வேண்டுகிறோம். இம்முதியோர் இல்ல கட்டிட நிதியாக ரூ.5,00,000/- வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில், இம்முதியோர் இல்லத்தில் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். தாங்கள் விரும்பிய தொகையை நன்கொடையாக வழங்குவோர் பெயரும் நமது முதியோர் இல்லத்தில் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும். **சிந்திப்பீர்... செயலாற்றுவீர்...**

## ஸ்ரீ ஜயேந்திர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல வரைபடம்



## தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

| Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act. | Sri Matha Trust PAN No. **AACTS9747G** | நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும். |
|---|---|---|

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687
Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647
Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. **9500001065 / 9003247857**
**vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org**

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி பாகம் - 3 பகுதி - 19

கல்லூரி காலத்திற்குள் உங்கள் மகன் அல்லது மகள் செல்வதற்கு முன் நீங்கள் புரிந்து கொண்டு, செயலாற்றவேண்டிய மூன்று விஷயங்களைப் பற்றி பேசுவோம்.

1. உங்கள் குழந்தைகளுக்கு ஆசிரியப் பெருமக்களின் உணர்வை புரியவைப்பது.
2. சுதந்திரம், பொறுப்பு, கட்டுப்பாடு என்றால் என்ன?
3. ஒரு மனிதனிடம் உள்ள 8 விதத் திறன்களில் எந்த வகைத் திறன் அவர்களிடம் அதிகமாக உள்ளது என்று கண்டறியும் திறனை அவர்களுக்கு கற்றுதருதல்.

மூன்றாவதாக உள்ளதைப் பற்றி ஏற்கனவே நான் எழுதிவிட்டேன் என்றாலும், மீண்டும் எழுதுவதின் காரணம் நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு இதை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதுதான்.

முதலாவதாக ஆசிரியப் பெருமக்களின் உணர்வை நீங்களும் புரிந்து கொண்டு, உங்கள் குழந்தைகளுக்கும் புரிய வைப்பது முக்கியமாகும்.

ஆசிரியர்களில் பல்வேறு வகை தனித்தன்மை, குணம் கொண்டவர்களாக இருப்பார்கள். “மாணவர்களும், நானும் ஒன்று” என்பது போல் பழகி, அன்பும், நட்புணர்வும் அதேசமயம் கண்டிப்பும் கொண்டவர்கள்.

“நீ மாணவன், நான் ஆசிரியன் இந்த

*வித்தியாசமும், அதற்கான பயமும் இருக்க வேண்டும். வகுப்பு பாடம் முடித்த பிறகு தான் நட்புணர்வு" எனும் தீர்மானத்தோடு இருக்கும் ஆசிரியர்கள்.*

*"நான்தான் ஆசிரியன். அடங்கி இரு. பேசாதே" என்று கடுமையான சட்டத்திட்டங்களோடு பாடம் எடுக்கும் ஆசிரியர்கள்.*

*"வகுப்பிற்குள் வந்தோமா, பாடம் எடுத்தோமா, அடுத்த வகுப்பிற்கு சென்றோமா" என்று கடமையை மட்டுமே பணியாற்றி கொண்டிருக்கும் ஆசிரியர்கள்.*

*"சார், இன்றைக்கு பசங்களுக்கு திமிர். அதற்கு மேலே பெற்றோர்கள் இருக்கிறார்கள். எனக்கு இந்த அலட்சியம் எல்லாம் சரிபடாது" என்று கடுமையான எதிர்மறை எண்ணங்களோடு இருக்கும் ஆசிரியர்கள்.*

*"ஆமாம் சார், இந்த வருடம் "சார், சார்," டீச்சர்ன்னு குழைஞ்சுட்டு, அடுத்த வருடம் ஒரு வணக்கம் கூட சொல்லமாட்டான். வருடாவருடம் மாறி கொண்டேயிருக்கும். இந்த கிளாசுல யாரோட சார் நல்லா பழக முடியும்?" என்று சலிப்பும், அலுப்புமாக இருக்கும் ஆசிரியர்கள்.*

*இப்படி பலவகை ஆசிரியப் பெருமக்கள், அவரவர் சூழல், எண்ணங்கள், பின்னணிக் கொண்டு பணி புரியும் பள்ளிகளில், முதலில் புரியாவிட்டாலும், மாணவ – மாணவியர்கள் ஒவ்வொரு ஆசிரியருக்கு ஏற்ப பழக கற்றுக் கொள்வார்கள்.*

**"அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்**
**தொகையறிந்த தூய்மை யவர்."**

**(அதிகாரம்-72, குறள்-711)**

*"வார்த்தைகளை நன்கு கோர்த்து பேசுபவர்கள், தாம் பேசும் சபையில் உள்ளவர்களின் தரத்தை நன்கு அறிந்து கொண்டு, சிறந்த ஆலோசனைகளோடுப் பேச*

வேண்டும்'' என்கிறார் வள்ளுவர்.

"ஆசிரியர்கள் என்றால் இப்படிதான் இருக்க வேண்டும்'' எனும் கட்டமைப்பிற்குள் ஆசிரியர்களை வைத்து எடைபோடும் பெற்றோர்கள், தன் குழந்தைகள் ஓர் வகுப்பறையில் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று யோசிக்கிறார்களா?

ஒருவர் காதில் ஒருவர் "கிசுகிசுப்பது'', கிண்டலும் நக்கலுமாக ஆசிரியரை கேலிச் செய்வது, பெண் ஆசிரியை கறுப்புப் பலகையில் எழுதும் பொழுது அவர்மீது "பேப்பர் பிளேன்'' அடிப்பது, என்றெல்லாம் இருந்த வினையில்லாத விளையாட்டுக்கள் இன்று "பெஞ்சை'' தூக்கி அடிப்பது, அரிவாள் கொண்டு மிரட்டுவது என்று ஆகிவிட்டது.

"ஆசிரிய – மாணவர் நல்லுறவு'' என்று ஒன்று உண்டு. இன்று ஒருவித விலகலும், விரிசலும் தான் தென்படுகிறது. ஆன்லைன் வகுப்புகள் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியப் பெருமக்களுக்கு வேலைப்பளுவை அதிகரித்துள்ளது.

திடீரென்று கொரோனா முடிந்து பள்ளி அல்லது கல்லூரிகள் திறந்தவுடன் மாணவர்கள் ஆசிரியர்களை அவமானப்படுத்துவதை கண்கூடாக காணமுடிந்தது.

அரசுப்பள்ளி அல்லது கல்லூரி ஆசிரியர்களுக்காவது பணி நிரந்தர நிம்மதி கிடைத்தது என்றால் தனியார் இடங்களில் பலர் பணியிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

இதில் மனந்தளராமல், சோர்வின்றி பணியாற்ற அவர்களுக்கும் சிறந்த "கௌன்சிலிங்'' தேவை. இதையும் ஓர் சேவையாக "வேதபாரதி'' செய்ய வேண்டுகிறேன்.

தொடரும்..

## குழந்தைகள் பகுதி

*அன்பு குழந்தைகளே!!! நலமாக இருக்கிறீர்களா?*

*சென்றஇரண்டு மாதங்களாக பறவைகளின் ராஜா* **"கழுகு"** *வாழும் விதம் குறித்து கூறினேன் அல்லவா? இந்த மாதம் கழுகின் மிக முக்கியமான குணத்தை அல்லது பழக்கத்தைப் பற்றி கூறுவதாக கூறியிருந்தேன் அல்லவா? அது என்ன? என்று பார்க்கலாமா?*

*பறவைகளின் ராஜாவான* **"கழுகு"** *கிட்டத்தட்ட 70 ஆண்டுகள் வாழக்கூடியது. அதில் 40 வருடங்கள் கழித்தபின் அதனுடைய சக்தி மிகுந்த கால்கள் மற்றும் நகங்கள் கூர்மை இழந்துவிடும். கூர்மையான அலகு கொஞ்சம் கொஞ்சமாக வளைந்துவிடும். இறக்கைகள் வலு இழந்து மார்போடு ஒட்டிக்கொண்டு கடினமாகிவிடும்.*

*இந்த நேரத்தில் கழுகு இறந்துவிடும் நிலைக்குத் தள்ளப்படும். ஆனால்* **"கழுகு"** *மீண்டும் புத்துயிர் பெற்று வாழ ஒரு கடினமான முடிவை எடுக்கும். அது என்ன தெரியுமா?*

*முதலில் ஒரு உயரமான மலையின் உச்சியில் ஒரு கூடு கட்டும். அதன்பின் தன் அலகை பாறையின்மீது மோதி, மோதி உடைக்கும். அதன்பின் புதிய அலகு முளைக்கும்வரை அந்த கூட்டிலேயே இருக்கும். புதிய வலுவான அலகு முளைத்தவுடன் அந்த அலகால் தன் கால் நகங்களை ஒவ்வொன்றாக பிய்த்து எடுக்கும். புது நகங்கள் முளைத்தவுடன் தன் இறக்கைகளை பிய்த்து எறிந்துவிடும். கிட்டத்தட்ட 5 மாதங்கள் கழித்தபின் அது மறுபிறவி எடுத்து மேலும் 30 ஆண்டுகள் கம்பீரமாக வாழும்.*

இதிலிருந்து நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டியது. நீங்கள் பெரியவர்களானால் நீங்களும் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். அந்த நேரத்தில் கழுகு போல் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

ஐந்து அறிவு உள்ள கழுகே தன்னுடைய வாழ்க்கையை வாழ கடினமான முடிவை எடுக்கும்போது ஆறு அறிவு படைத்த நாம் ஏன் பிரச்சனைகளைப் பார்த்து சோர்ந்து போக வேண்டும். தன்னம்பிக்கையோடு எழுவோம்.

அடுத்தமாதம் வேறு ஒரு புதுபகுதியோடு வருவேன்.

*உங்கள் அன்புள்ள :* **"வேதபாரதி" தாத்தா**

**பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆசிகளுடன்**

**ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாம மண்டலி, திருப்பூர்**
**மற்றும் வேதபாரதி இணைந்து நடத்தும்**
**ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம், ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாம பாராயணம்**

நாள் : 14.08.2022,
இடம் : குமாரசாமி கல்யாண மண்டபம், திருப்பூர்
அனைவரும் வருக, வருக.

**மேலும் தொடர்புக்கு : 9952266676 / 9486392917**

**வேதபாரதி புதுச்சேரி நடத்தும்**
**ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம்,**
**ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாம பாராயணம்**

நாள் : 28.08.2022,
இடம் : ஸ்ரீ சங்கர வித்யாலயா, ECR ரோடு, புதுச்சேரி
அனைவரும் வருக, வருக.

**மேலும் தொடர்புக்கு :**
**9842607476 / 9443337023**

## சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

# ஸ்ரீ சிவபிருந்தாதேவி – முதல் பகுதி

## பாரத தேசத்தின் முதல் பெண் ஆதீனம்



என் சிறு வயதிலிருந்தே ஸ்ரீ சிவபிருந்தா தேவி பற்றி நிறைய கேள்விப் பட்டிருக்கிறேன். எங்கும் அவரது பேச்சாக இருக்கும். ஆனால் அப்போது என் புத்தியில் பதியவில்லை. புதுக்கோட்டையைச் சேர்ந்த நான், புதுக்கோட்டை மண்ணுக்கு, உலகமே வியக்கும் அளவிற்கு பெருமை சேர்ந்துள்ள சைவசித்தாந்தப் பெண்மணியைப் பற்றி, மிகத்தாமதமாக எழுதுவதற்கு இறைவனிடம் மன்னிப்பை வேண்டிக் கொள்கிறேன்.

சுவாமி விவேகானந்தரைப் போற்றும் அளவிற்கு நாம் இவரைப் போற்றியிருக்க வேண்டுமோ என்கிறஎண்ணமே எனக்குள் தோன்றியது இவரது வரலாற்றைப் படித்த பிறகு. இவரின் மிக அருகில் இருந்தும் நான் இவரை அறிந்து கொள்ளாமல் இருந்து விட்டனே என்கிறவருத்தமும் எழுகிறது. இப்போதாவது புத்தியில் உரைத்ததே என்று மனம் தேற்றிக் கொண்டு, ஸ்ரீ பிருந்தாதேவியின் தாள் பணிந்து எழுதத்தொடங்குகிறேன். புதுக்கோட்டை சமஸ்தானத்தின் ஆஸ்தான பரதக்கலைஞராக விளங்கிய சிவராம நட்டுவனார். நல்லம்மாள் தம்பதியின் ஏழாவது கடைக்குட்டிக் குழந்தையாக 1927-ம் ஆண்டு பிறந்தார் இந்த அம்மையார். (என் தாய்வழி தாத்தா வைத்தியநாதபாகவதரும் புதுக்கோட்டை

*சமஸ்தானத்தின் ஆஸ்தான மிருதங்கவித்வானாக இருந்தவர் என்பதைப் பெருமையுடன் இங்கே பதிவு செய்கிறேன். புதுக்கோட்டை கெஜெட்டிலும் இவரது பெயர் பதிவாகியுள்ளது. மேலும் புதுக்கோட்டை அருங்காட்சியகத்திலும் இவரது புகைப்படம் இடம் பெற்றுள்ளது).*

*பள்ளிப்பருவத்திலிருந்தே, பிருந்தா தேவியின் ஆன்மீக, சமூக, தேச அக்கறைமிகுந்த பேச்சாற்றல் அனைவரையும் வியக்க வைத்தது. பள்ளிப்படிப்பு முடிந்ததும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்* P.O.L. (Philosophy of Oriental Literature) *படித்தார். சுவாமி சிவானந்த சரஸ்வதியின் திருக்கரங்களால் பட்டம் பெற்றுக்கொண்டார். இவரது ஆன்மீக எழுத்து மற்றும் பேச்சாற்றலையும் கண்டு வியந்து, பல்கலைகழத்தின் பதிவாளரும் சைவப் பெரியாருமான திரு.சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், பிருந்தாதேவியை, சைவசித்தாந்தம் பயில ஊக்குவித்தார். தருமபுர ஆதினத்தில், அறுபதுக்கும் மேற்பட்ட ஆண்களுக்கிடையே, ஒரே பெண்மணியாகப் பயின்று "சிவபிருந்தாதேவி" யாகப்பரிமளித்தார். "தனியொரு பெண்மணியாகப் படிப்பது சங்கடமாக இல்லையா?" என்று சச்சிதானந்தம் பிள்ளை கேட்ட கேள்விக்கு சிவபிருந்தாதேவி அவர்கள் அளித்த பதில் அவரின் அதீத ஞானத்தின் வெளிப்பாடாகவே இருந்தது. "ஆண் – பெண் என்பதெல்லாம் உடலாலும் உடையாலும் தானே, ஆன்மாவுக்கு ஏது இத்தகைய வேறுபாடுகள். படிப்பதும்வெறும் அறிவினைப் பெறுவதற்கு அல்லவே, தத்துவ ஞானம் பெறுகின்ற கல்வியைப்பயிலும் போது இத்தகைய வேறுபாடுகள் வேரற்றுப் போகுமே தந்தையே" என்றார்.*

*சிவபிருந்தாதேவியின் தனிச்சிறப்பு அவரது பேச்சாற்றல் எங்கும் இவருக்கு சிவப்புக்கம்பள*

வரவேற்பு இவர் பேசும் ஒவ்வொரு தலைப்பும் வியக்கத்தக்க வரவேற்பை பெற்றது. இவரது வெண்கலக்குரலும், சொல்லாற்றாலும், தெளிந்த ஞானச்செறிவும் பெண்குலத்திற்கே பெருமை சேர்த்தது இவர் நாடறிந்த சொற்பொழிவாளர் ஆனார். காசுக்குப் பேசும் பேச்சாளர் இல்லை. சுவாமி விவேகானந்தரைப் போல் தேசியமும், ஆன்மீகமும், இருகண்கள் என்று புரியவைத்து, யுவ, யுவதிகளைத் தட்டி எழுப்பும் நோக்கத்தோடு மட்டுமே செயல்பட்ட உன்னதப் பெண்மணியாக சிவபிருந்தாதேவி திகழ்ந்தார். அரசியல் வாதிகளும் இவரை விட்டுவைக்கவில்லை. தமிழக முதல்வர்கள், ஆதினகர்த்தர்கள் என்று பலரும் இவரை போற்றிப் பாராட்டியதுடன் சிறந்த வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

திரு.காமராஜரின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்கிகாங்கிரசிலும் இணைந்து பத்து ஆண்டுகளுக்கும் மேலாக கட்சிப்பணியாற்றினார். ஆனால் அவரின் மனம் ஆன்மிகம், சமுதாய நலன் இரண்டிலுமேநிலை கொண்டது. 1957 ம் ஆண்டு பத்மபூஷன் டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி அம்மையாரின் பெயரில் மகளிர் இல்லம், படிப்பகங்கள் அமைத்து, ஆயிரக்கணக்கான ஆதரவற்ற பெண்களுக்கும். ஏழைக் குழந்தைகளுக்கும் உணவு, உடை, இருக்குமிடம், கல்வி, கல்வி வசதிகள் செய்து கொடுத்து ஆதரவளித்து அனைவரது பாராட்டையும் பெற்றார். எதைச் செய்தாலும் நிறைவாகச் செய்த சிவபிருந்தா தேவியின் மனம் தனிப்பட்ட பாசபந்தத்திற்குள் சிக்கிக் கொண்டுவிடாமல், சமுதாய, ஆன்மீகப் பணிகளைச் செய்ய விழைந்தது. இதன் விளைவாக 1972 ம் ஆண்டு துறவறம் மேற்கொண்டார். இது அவரை எங்கே கொண்ட சென்றது என்று பார்ப்போம்...

அடுத்தும் சிவபிருந்தாதேவியை சிந்திப்போம்...

# லண்டன் பயணம்

சென்றமாத தொடர்ச்சி.....

முதல் நாள் ஆஃபிஸ் சென்றபோது, அதே டீமில் பணிபுரியும் காலினும், மேத்யுவும் நன்றாக கவனித்துக்கொண்டனர். காலை எட்டு மணிக்கெல்லாம் அங்கே வேலையைத் தொடங்குகிறார்கள். மாலை நான்கு மணிக்குள் மூட்டையும் கட்டிவிடுவார்கள். மீட்டிங் என ஆரம்பித்து வார இறுதியில் நடைபெற்றஃபுட் பாலையும், கிரிக்கெட்டையும் அலசி ஆராய பதினைந்து நிமிடம், பின்பு கேம் ஆஃப் த்ரோனம், பீக்கீ பிளைன்ட்ர்ஸூம் பத்து நிமிடம் இறுதியாக வேலையைப் பற்றி ஒரு ஐந்து நிமிடம் கலந்து ஆலோசித்த பிரிட்டிஷ் நண்பர்களைக் கண்டு சற்று வியப்புதான்.

காலை ஹோட்டலில் Breakfast—சைவத்திற்கென்று பன், வெண்ணை, சில பச்சை காய்கறிகள். மதியம் மிஞ்சிப்போனால் காய்களைக் கொண்டு சூப் கிடைக்கும். மிச்சமுள்ள அனைத்தும் ham, steak என வெவ்வேறு வகை. Fish and Fries இல்லாத உணவிடங்களைப் பார்க்க இயலாது. ஊரிலிருந்து எடுத்து வந்த Cup Noodlesm, Instant Poha-வும் காலியாகி விட்டது. இதை விட்டால் மூன்று வேளையும் பன்னும், ரொட்டியும், வாழைப்பழம், ஆப்பிள் பெரும்பாலும் இருக்கும். அதை வைத்துக் கொண்டு சமாளிக்க வேண்டியது தான்.

மொத்தம் ஐநூறு நபர்கள் இருக்கும் ஆஃபீஸில் எண்ணி நான்கு அல்லது ஐந்து இந்தியர்களைக் காண முடிந்தது. அந்த சொச்சத்திலும் தமிழர்கள் இல்லை. பானுவுடைய இந்திய முகத்தைப் பார்த்து ஒரு இந்திய

நபர் (தெலுங்கர்) தன் இல்லத்தின் வரலட்சுமி விரத பூஜைக்கு அழைத்தார். பூஜைக்கு நான்கு குடும்பங்கள் வந்திருந்தனர். இத்தனை இந்தியர்களை ஒரு சேர ஒரு இடத்தில் பார்த்ததில் மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. அங்கு வந்திருந்த மற்ற நபர்கள் மராட்டி, ஹிந்தி என வெவ்வேறு மொழி பேசுபவர்கள். எல்லோரும் அங்கு ஆங்கிலத்தில் பேசிக்கொண்டது வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. மேத்யு ஒருமுறை கேட்டே விட்டார். "Its funny to witness people speaking different languages within the same country" அதற்கு பானு "That's our speciality, the chaos and the difference is our strength" என பதில் கூறினாள்.

வரலட்சுமி பூஜையில் வரப்பிரசாத வடையும், பாயசமும் கிடைத்தது. இண்டியன் சாமான்களை வாங்க 50 கி.மீ. தள்ளி ஒரு பாகிஸ்தானி கடை இருக்கிறது. மாதத்திற்கு ஒரு முறை எல்லாவற்றையும் வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். பூஜையிலிருந்து கிளம்பும் வேளையில் எங்கிருந்தோ இன்பத்தமிழ் காதிலே பாய்ந்தது. பானுவின் கண்களில் ஆயிரம் வாட்ஸ் ஒளி. அந்த தமிழ் அன்பரின் பெயர் செந்தில் என அறிமுகப்படுத்தி வைத்தார். பானுவோ காணாததைக் கண்ட மாதிரி நடந்துகொள்ள, செந்திலோ நரசிம்மராவ் பேரனைப் போல எந்த வெளிப்பாடும் இல்லை. ஒரு வித திமிரும், எதற்கடா இங்கே ஒரு தமிழரைக் கண்டோம் என்பது போல உணர்வு கொண்டவராகத் தோன்றியது. பானுவின் ஆயிரம் வாட் ஒளி மங்கிப் போனது. இவ்வாறு இன்னும் இரண்டு வாரங்கள் ஆஃபிஸிற்கும், ஹோட்டலிற்கும் இடையே சென்றது. சிறிது நாட்கள் தங்கியதில் நிறைய முகங்கள் பழகிப்போயின. போக

வர ஆங்காங்கே புது நண்பர்கள் விசாரிப்பதும், பேசுவதும் மனதிற்கு பிடித்திருந்தது. ஆனாலும் இன்னும் பழகாதது உணவு ஒன்று தான். பிரட்டைப் பார்த்தாலே தூக்கி விட்டெறியலாம் போல கோபம் வந்தது. குறிப்பாக சுத்த சைவக்காரர்களுக்கு ஒரு ஐரோப்பிய கிராமத்தில் சமாளிப்பது கடினமான சமாச்சாரம் தான். இன்னும் சில வாரங்களில் ஊருக்குச் சென்றுவிடலாம் என்ற எண்ணத்தில் நாட்கள் நகர்ந்தன.

ஊருக்கு திரும்புவதற்கு ஒரு வாரம் முன்னால், ஒரு ஐரோப்பிய தோழி ஜெனிஃபர் லண்டனுக்கு வார இறுதியில் சுற்றிப் பார்க்கலாம் எனக் கூறினாள். ஜெனிஃபர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவள். அமெரிக்க, பிரிட்டிஷ் ஆங்கிலத்தைப் பார்க்க அயர்லாந்துகாரர்கள் பேசும் ஆங்கிலம் சற்று வித்தியாசமாக இருக்கும். பிரிட்டிஷர்கள் எல்லாவற்றையும் நையாண்டி செய்பவர்கள். அயர்லாந்து காரர்களின் ஆங்கிலம் அதற்கு விதிவிலக்கல்ல. ஜெனிஃபர் டிரைனில் (Train) போவதற்கான டிக்கெட்டை வாங்கியிருந்தாள்.

காலை எட்டு மணிக்கெல்லாம் கிளம்பிவிட்டார்கள். லண்டன் நகர் உண்மையாகவே பழமையும், புதுமையும் கலந்த கலவை, தேம்ஸ் நதியோரத்திலிருந்து ஊரைப் பார்த்தது மிக அழகு. லண்டன் ஐ என ஒரு மிகப்பெரிய இராட்டிணத்தில் சுற்றி வந்தார்கள். ஒரு நாள் முழுவதும் லண்டன் தெருக்களில் நடந்தே கழித்தார்கள். ஒரு மணியளவில் பசி வயிற்றைக் கிள்ளியது.

தொடரும்...

**வெ.சிவசங்கரி**

## பசு - சர்வரோக நிவாரணி

*சென்றமாத தொடர்ச்சி....*

*அவற்றைபார்க்கும்போதே எளிதில் நாம் புரிந்து கொள்ளலாம். கருணையுணர்வு இருப்பவர்கள் இதுபோன்றசெயல்களை செய்வதில்லை.*

*நாம் இந்த தேசத்தின் குடிமகனாக, சனாதன தர்மத்தின் பிள்ளைகளாக, கருணையின் சிந்தையாக மற்றும் நமது கடமையாக அறத்திற்கு எதிராக செயல்படும் இதுபோன்ற(நிகழ்வுகளை) செயல்களை தடுக்க வேண்டும். இன்றைய அரசியல் சூழலில் நேரிடையாக நம்மால் தனி மனிதனாக ஆக்கப்பூர்வமாக தடுப்பது எளிதல்ல. ஆனாலும், இது போன்ற ஒவ்வொரு மாடுகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களை படமெடுத்து அதன் பதிவெண்ணுடன் சம்பந்தப்பட்ட அலுவலகம் அதிகாரிகளிடம் புகார் கொடுக்கலாம். முடிந்தால் வாகனத்தை நிறுத்தி தெளிவாக கைப்பேசியில் படமெடுக்கலாம், நாம் பல வேலை நிமித்தமாக சென்றாலும் இமெயில் மூலமாக பயணத்தின்போதே புகார் அளிக்கலாம். இதன் மூலம் புகார்களின் எண்ணிக்கை கூடும்போது, ஒரு கட்டத்தில், அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் ஒரு மனமாற்றத்திற்கு வருவார்கள். ஏனெனில் இவர்களது துணையுடன்தான் நாட்டின மாடுகள் சட்டத்திற்கு புறம்பான முறையில் கடத்தப்படுகின்றன. இறைச்சிக்காக வெட்டுக் கூடத்திற்கு கொண்டு செல்லப்படும் மாடுகள்கூட விதிகளுக்கு உட்பட்டே வாகனங்களில் ஏற்றப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை...*

*இந்திய அரசினால் 1978-ம் ஆண்டு*

கொண்டுவரப்பட்ட கால்நடைகளை இடம்விட்டு இடம் வாகனங்களில் ஏற்றிச் செல்வதற்கான சட்டம் என்ன சொல்கிறது என்பதை பார்ப்போம்...

இந்த சட்டத்தின் பிரிவுகள் 47-லிருந்து 56 வரை கூறப்பட்டுள்ள விதிகள் பிரத்யேகமாக மாடுகளுக்கானதாகும். இச்சட்டப்பிரிவுகளின் உட்பிரிவுகள் மேலும் விபரமாக விதிகளை சொல்கிறது. இந்த சட்டங்கள் வாகனங்களில் ஏற்றுவதற்கு முன், பயணத்தின்போது, மற்றும் வாகனத்திலிருந்து கீழே இறக்கி விடும்வரை எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை தெளிவாக்குகிறது.

வாகனங்களில் ஏற்றுவதற்கு முன்னதாக இந்த சட்டத்தில் வராத சில நடைமுறைகளை உள்ளாட்சி விதிகளில் கூறப்பட்டுள்ளன. அவற்றின்படி ,

சந்தைக்கு மாட்டினை கொண்டுவந்த விவசாயி யாரிடம் விற்கிறாரோ அவரிடம் தான் பெற்றுக்கொண்ட தொகைக்கு கடிதம் தரவேண்டும். மற்றும் அவரது முழு முகவரியையும், வாங்கினவரின் முழு முகவரியையும் அக்கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

இக்கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு, சந்தை நடைபெறும் ஊராட்சி அமைப்பிடம், மாட்டினை வெளியூர் கொண்டு செல்ல ஆட்சேபனை இல்லை என்ற கடிதத்தை மாடு வாங்கியவர் பெறவேண்டும்.

இந்த இரண்டு கடிதத்தை கொண்டு வாகனங்களில் ஏற்றுவதற்கு முன்பாக மத்தியரசின் சட்டங்களை பின்பற்ற வேண்டும். அவற்றை ஒவ்வொன்றாக காண்போம்.

**- ஆதிரையன்**

ஹரி:ஓம்

# வேதபாரதி

எண்.31, சேஷாத்ரிபுரம் முதல் பிரதான சாலை,
பேபிநகர், வேளச்சேரி, சென்னை - 42.
vedabharathichennai@gmail.com

**வழங்கும்**

# "யுவஸ்ரீ" வாழ்வியல் பயிலரங்கம்

(பெண்களால் பெண்களுக்காக நடத்தப்படுகிறது)

# பெண்மையைப் போற்றுவோம்

அன்புடையீர்,

வரும் ஜுலை 17ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பெண் குழந்தைகளுக்கான வாழ்வியல் பயிலரங்கம் நடக்க உள்ளது.

பெண் குழந்தைகளுக்கான தன்னம்பிக்கை, வேலைவாய்ப்பு, சுய பாதுகாப்பு, குடும்ப நலன், சமூக வலைத்தளம் போன்ற விஷயங்கள் குறித்து பயிலரங்கம் நடத்த உள்ளோம். தாங்கள் தங்கள் பெண் குழந்தைகளுடன் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| காலை 8.00 - 12.00 மணி | விளையாட்டு, சொல் அரங்கம், காணொலி, கேள்வி பதில் நிகழ்ச்சிகள் |
| பகல் 12.00 - 1.00 மணி | உணவு |
| பகல் 1.00 - 2.00 மணி | **பாரதி கண்ட புதுமைப்பெண்**<br>ஸ்ரீ க்ருஷ்ணஜகந்நாதன் ஜி |
| மதியம் 2.30 - 3.30 | **வேதபாரதியின் வேர்களுக்கு பாராட்டுவிழா**<br>பாராட்டுப்பெறுபவர்கள் :<br>ஸ்ரீமதி காந்தலக்ஷ்மி சந்திரமௌலி<br>ஸ்ரீமதி டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன்,<br>ஸ்ரீமதி கலைவாணி, ஸ்ரீமதி பூர்ணிமா,<br>ஸ்ரீமதி காந்தாமணி, |
| நிறைவு விழா | **சிறப்புரை**<br>Dr. சுதா சேஷையன், M.S., அவர்கள்<br>துணைவேந்தர்<br>தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்.<br>மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை |
| நன்றியுரை | ஸ்ரீமதி நீலா முரளிதரன் |

மேலும் தொடர்புக்கு :

**Cell : 9443495950 Whatsapp : 638352097 / 8300158620**

**மகா பெரியவா 129வது ஜெயந்தி விழா - 2022**

*வேதபாரதி, நங்கநல்லூர் கிளை மற்றும் ஸ்ரீ ராதா கல்யாண மகோத்ஸவ சேவா கமிட்டி நங்கநல்லூர் இணைந்து மகா பெரியவா 129வது ஜெயந்தி விழாவை மிக விமர்சையாக ஜுன் 12, 2022 அன்று காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை அக்க்ஷயா மஹால், 5வது மெயின்ரோடு, தில்லைகங்கா நகர், நங்கநல்லூர் (பி.எம். மருத்துவமனை அருகில்) கொண்டாடினார்கள். காலை 8.00 மணிக்கு வேதபாராயணம் நிகழ்ச்சி தொடங்கி 9.00 மணிக்கு மகா பெரியவா சரணம், சொற்பொழிவு சொல்லின் செல்வர் திரு.மணிகண்டன் அவர்களால் நடந்தப்பட்டது. மாணவ மாணவிகள் பங்கு பெற்ற நாம சங்கீர்த்தனம் மற்றும் நிகழ்ச்சிகளும், பரிசளிப்பு விழாவும் மிகசிறப்பாக நடைபெற்றது. கலந்துகொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கி விழா இனிதே நிறைவுபெற்றது.*



# தென் கயிலாயங்கள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

*இம்மூன்று தலங்களின் சிறப்பைக் காண்போம் : சென்றமாத தொடர்ச்சி...*

*திரிசிரன் என்னும் அசுரன் வழிபட்ட தலம் ஆதலால் இது திரிசிரபுரம் எனப்பெயர் பெற்றது! இதனைத் திருவிளையாடல் புராணம்.*

*'முச்சென்னி மடங்கலேறு அனையான் நாமவரை இது!" என்று கூறுகிறது!*

*பிரமன், இந்திரன், சடாயு, சப்தரிஷிகள் சாரமாமுனிவர், மௌனகுரு, தாயுமான சுவாமிகள் ஆகியோர் வழிபட்ட தலமிது!.*

*மலைக்கோட்டை நகரின் நடுவில் உள்ளது. தாயுமானவர் திருக்கோவில் மலைமேல் நடுவிலும் மலை உச்சியில் உச்சிப்பிள்ளையார் கோவிலும் உள்ளது.*

*மலை அடிவாரத்தில் மாணிக்க விநாயகர் சந்நிதியில் வணங்கி, நூற்றுக்கால் மண்டபத்தைக் கடந்து மலை ஏறி நடுவில் உள்ள தாயுமானவர் ஆலயத்திற்குச் செல்கிறோம்!*

*கோவிலுள் விசாலமான முன் மண்டபம், அறுபத்து மூவரை வணங்கி, கம்பத்தடி விநாயகர், செவ்வந்தி விநாயகர், ஆறுமுகர், உற்சவர்களைத் தரிசித்துக் கருவறையில் மேற்கு நோக்கிய மாத்ரு பூதேஸ்வராலயம், தாயுமானவரைத் தரிசிக்கிறோம். பெரிய திருமேனி, உள்ளம் குளிரத் தரிசித்து, அம்பாள் மட்டுவார் குழலி சந்நிதியை அடைகிறோம். நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிக் காட்சி தருகிறாள்.*

*பின் மேலே உள்ள உச்சிப்பிள்ளையாரை வணங்கித் திரும்புகிறோம்.*

சாரமா முனிவர் நாகலோகத்திலிருந்து கொண்டுவந்த செவ்வந்தி மலர்களால் சிவபிரானை பூசித்ததால் இவருக்கும் செவ்வந்தி நாதர் என்றும் பெயர் உண்டு.

சைவ எல்லப்ப நாவலர் செவ்வந்திப்புராணம் பாடியுள்ளார். வேம்பையர் கோன் நாராயணன் என்பவர் கலித்துறை அந்தாதி பாடியுள்ளார்,

சிராமலைக் கோவை, திரிசிர உலா, பதிற்றுப் பத்து அந்தாதிகள், யமக அந்தாதி, சிலேடை வெண்பா, ஆகிய பிரபந்தங்கள் இத்தலத்தின் பெருமையைக் கூறும் நூல்கள். அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், ஐயடிகள், காடவர் கோன், வள்ளலார் போன்றோர் பாடியுள்ளனர்.

சுகப்பிரசவம் அடைய வாழைத்தார் கட்டுதல் என்னும் பிரார்த்தனை இங்கு செய்யப்படுகிறது. நன்னுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளேறு ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச் சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என் உள்ளம் குளிருமே. (சம்பந்தர்)

"சிராப்பள்ளி மேவிய சிவனேபோற்றி"

சிராப்பள்ளியை வணங்கிக் கைலைநாதன் அருள் பெறுவோம்.

**3. திருக்கோண மலை :**

இது ஈழ நாடாகிய இலங்கையில் உள்ள தலமாகும். இத்தலம் 1200 ஆண்டுப் பழமை வாய்ந்த திருத்தலம். சோழரும் பாண்டியரும் பல திருப்பணிகள் செய்த தலம்.

கீழ்மாகாணமாகிய மட்டக்களப்பில் கடற்கரை ஓரமாகச் சாய்வாக உள்ள குன்றமே திருக்கோணமலை

*ஆகும். இங்குள்ள சிவபெருமான் கோணகர், அம்பிகை மாதுமையாள்.*

*இங்கே மலைக் கொழுந்தாக இருந்த சிவபிரானை எடுக்க இராவணன் முயன்றதாகவும், எடுக்க முடியாததால் கோபம் கொண்டு தன் வாளால் மலையை வெட்டியதாகவும், வெட்டிய இடம் பெரிய பிளப்பாக உளதாகவும் கூறப்படுகிறது. குன்றின் மூன்றுபக்கமும் கடல் சூழ்ந்துள்ளது.*

*சம்பந்தரும் வள்ளலாரும் பாடிய தலம். சேக்கிழார் சுவாமிகள், ஆழி புடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் மன்னு திருக்கோணமலை மகிழ்ந்த செங்கண் மழவிடையார் எனப்பாடியுள்ளார். 1963, 1981 இல் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.*

*பங்குனி உத்திர நாளில் கொடியேறி 18 நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. சிவராத்திரி விழா மூன்று நாள் திருவிழாவாகச் சிறப்புடன் நடைபெறுகிறது. தெப்பத் திருவிழா கடலில் நடைபெறுகிறது.*

*நவராத்திரி நாளில் ஸ்ரீ சக்கர பூஜையும் நடைபெறுகிறது. கடல் கடந்து அருள்பாலிக்கும் கோணேசரை வணங்கி கைலைநாதனின் அருள்பெருவோம்.*

*இவை தவிர அப்பர் பெருமான் திருக்கைலாய காட்சிகண்ட திருவையாறும், மாணிக்கவாசகர் சிவதரிசனம் கண்ட திருப்பெருந்துறை எனப்படும் ஆவுடையார் கோவிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நவகைலாயங்களும் கைலாய மலைக்கு இணையாகப் போற்றப்படுகின்றன.*

*காவாய் கனகத்திரளே போற்றி! கயிலைமலையானே போற்றி!*

*முற்றும்.*



உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.
Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS
BK MATRIMONY
An Auspicious Beginning ...
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

## வேதபாரதி கோடி காயத்ரீ ஜப யக்ஞம் - 2022 கலந்துரையாடல்

*வேதபாரதி "கோடி காயத்ரீ ஜப யக்ஞம் 2022 தொடர்பான கலந்துரையாடல் Zoom வழியாக 22 ஜுன் 2022 இரவு 9 மணிக்கு நடைபெற்றது. நிகழ்ச்சியில் வேதபாரதியின் ஒருங்கிணைப்பாளர்கள். சென்னை, நங்கநல்லூர், கும்பகோணம், பாண்டிச்சேரி, திருப்பூர், ஊரப்பாக்கம், மதுரை, கரூர், தர்மபுரி ஆகிய பகுதிகளிலிருந்து கலந்து கொண்டனர். வேளச்சேரி திரு.முனீஸ்வர சாஸ்திரிகள், திரு.வெங்கட்ராமன், திரு.சூரியநாராயணன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். திருப்பூர் வேதபாரதியின் சார்பாக 14.08.2022 அன்று கோடி காயத்ரீ ஜப யக்ஞம் நடைபெற உள்ளது. பாண்டிச்சேரி வேதபாரதியின் சார்பாக 28.08.2022 அன்று கோடி காயத்ரீ ஜப யக்ஞம் நடைபெற உள்ளது. அனைத்து பகுதிகளிலிருந்தும் சேர்ந்து ஜபிக்க முடிவு செய்யப்பட்டது. இதுவரை 650 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளார்கள். மீதமுள்ள கார்டுகளின் கணக்குகளையும் பதிவு செய்ய ஆவன செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது.*


STAR Health Insurance
Personal & Caring
The Health Insurance Specialist



மருத்துவ பாலிசி உங்களை
செல்வந்தராக்காது
ஆனால்
உங்கள் குடும்பத்தை
கடனாளியாக்காமல் பாதுகாக்கும்!!!



மருத்துவமனை வரவேற்பறையில்
சிறிது நேரம் அமர்ந்து பாருங்கள்



ஏன் மருத்துவ பாலிசி
எடுக்க வேண்டும் என்பதற்கு
பதில் கிடைக்கும்.

S. Narayanan - 9360277372



## ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு “ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்” **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646**; ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**M. இராமகிருஷ்ணன்,** அறங்காவலர்
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

## ப்ரும்மோபதேச சுபமுகூர்த்த வாழ்த்துக்கள் உபநயனம்

**01.06.2022**

செல்வன் ராமானுஜவரதன், நங்கநல்லூர்

**03.06.2022**

செல்வன் J. ராகவ், பள்ளிக்கரணை

**9.06.2022**

V. தன்வந்த் ஆத்ரேயா

A. அபிமன் ஆத்ரேயா, நங்கநல்லூர்

**24.06.2022**

R. சாய்குரு

R. சுரேந்தர், தூத்துக்குடி (நன்னிலம்)

## வேதபாரதி புதுமண தம்பதியர் வாழ்த்துக்கள்

**03.06.2022**

சிவி.S. நாகசுந்தரம் – சௌ. C. சுவர்ண சாரதா

தஞ்சாவூர்

**09.06.2022**

ஸ்ரீமான் கைலாஸகனபாடிகள் - சௌ. B. பூஜா

அம்பத்தூர்.

**13.06.2022**

சௌ. N. ஐஸ்வர்யா – சிவி. K. விக்னேஷ்

பம்மல், சென்னை.

## பொன்விழா தம்பதியர் வாழ்க பல்லாண்டு

**01.06.2022**

ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி - ஸ்ரீமதி. ரமா

நங்கநல்லூர்

**எல்லோரும் எல்லா வளமும் நலமும் பெற்று பல்லாண்டு வாழ வேதபாரதியின் சார்பாக மனதார வாழ்த்துகிறோம்.**

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்ப்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th July 2022




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829
78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

If not delivered please return to
VEDABHARATHI
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.